தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஸு கார்த்திகை மீ 11உ (26-11-'22.) | ப. 30.

விஷய அடக்கம்.

1. உலக நடை 311
(உதவி பத்திராதிபர்)

2. சிபிச் சக்ரவர்த்தி ... 313
(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்)

3. தில்லை வாழந்தணர் ... 313
(துகளன் எழுதியது)

4. ஸர்வ தேச ஸங்கமும் இந்தியாவும் ... 314
(உதவி பத்திராதிபர்)

5. ஏகாதசி விரத மாகாத்மியம் ... 315
(N. R. ஐயர், B. A., B. L.)

6. அரசரும் மதாசாரியாரும் ... 316
(R. பஞ்சாபகேசன்)

7. புயற் காற்று ... 317
(V. நாராயணையர், M.A., M.L.)

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது !!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வாதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16. 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி

ராமய்யசெட்டி

குருசாமிசெட்டி

கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்

25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుస్వామి శెట్టి

కంపెని

నగల వర్తకులు

25, చైనా బజారు రోడ్డు, మదరాసు.

பணம் திருப்பி கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக

வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்க மாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வருஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம்வரை படித்தவர்களுக்கும் 3வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணுக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக்கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணு எட்டு குறைவு செய்யப்படும்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,

4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

ஒத்துழையாமை

இதர தேசங்கள் வெற்றி பெற்ற விவரம்

ஒத்துழையாமை என்னும் தெய்வீக இயக்கத்தின் விசேஷத்தை உய்த்துணராத சிலர், இந்த இயக்கத்தை மேற்கொண்டு அதிகாரி வர்க்கக் கோட்டையைத் தகர்த்து சுயராஜ்யக் கொடி நாட்ட முடியுமா வென்று சந்தேகப்படுகின்றன. அத்தகையோரும் சரி, பிறரும் சரி, அவ் வியக்கத்தின் விசேஷத்தை அறியவேண்டி, ஹங்கேரி தேசம் அவ்வியக்கத்தைச் சாதனமாகக் கொண்டு, ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தைப் போக்கி, சுயராஜ்ய வாழ்வு பெற்ற விருத்தாந்தமும், ஜப்பானியர் சொல்லவொண்ணாத கொடுமை யியற்றிய கொரியாவும் குடியரசுக் கொடி நாட்டும் விவரமும், இந்நூலிலே எளிய இனிய தமிழ் நடையில் சிறுவரும் சிறுமியரும் உணருமாறு சுருங்கச்சொல்லி விளங்கக் கூறப்பட்டுள்ளன.

விலை அணு 0—4—0

கணேஷ் கம்பெனி,

39, தம்பு செட்டி தெரு, சென்னை.

லோகோபகாரி.

ஆசிரியர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

நல்ல வாரப் பத்திரிகையை விரும்பு கிறீர்களா?
புத்துயிர் பெற்றுப் பொற்படைய விரும்புகிறீர்களா?
இன்பமான பொழுது போக்கை விரும்பு கிறீர்களா?
சிறந்த செந்தமிழ்ப் பாடல்களை விரும்பு கிறீர்களா?
தேசத்தில் நடக்கும் செய்திகளை அறிய விரும்பு கிறீர்களா?
வேதாந்தம் படிக்க விரும்புகிறீர்களா?
உலக விநோதங்களை அறிய விரும்பு கிறீர்களா?

அவ்வாருனல், சென்னையிலிருந்து சென்ற இருபது வருஷ காலமாக வியாழன் தோறும் வெளிவரும் லோகோபகாரிக்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

வருஷ சந்தா ரூபாய் நாலே—மாதிரிப் பிரதி இனம்.

காரியஸ்தர்,

"லோகோபகாரி," சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

டாக்டர் ஹாரால்ட் மான் என்ற புத்திமான் சிந்துப் பிரதேசத்தில் விவசாய அபிவிருத்தியைக் கருதி சுற்றிவருகையில், விவசாயிகள் நவீன முறைகளை பின்பற்றுவதில் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ளுவதில்லையென்ற குறை மற்ற தேசங்களிலும் உள்ளதென்றும் இந்திய விவசாயிகள் ஏழைகளாகவும் கடனாளிகளாயுமிருப்பதால் புதிய முறைகளை அனுஷ்டிக்கக் கூடவில்லையெனவும் அறிந்து, அதனை சீர்திருத்த பல ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறுகிறார். எப்போதும் பலனை யடைந்து வந்த வழிகளைவிட்டு, அதிகப்பலனைத் தருகிறதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளும் வரை, புதிய முறைகளை எங்ஙனம் கைக்கொள்ளுவார்கள். புதிய முறைகளில் செலவிட்ட தொகையை மீண்டு எடுக்கமுடியுமாவென்ற சந்தேகம் தீரவேண்டாமா?

ஸர்வ தேச ஸங்கத்தில் நவநகர் மஹாராஜா கெனியா இந்தியர்களின் குறைகளை வெகு நன்றாக எடுத்துச் சொல்லி அக்குறைகளைத் தீர்ப்பதே ஸங்கத்தின் முதற்கடமையெனக் கூறினார். தேச நலத்திற்கு உழைப்பவர்கள் எங்கு சென்று பாடுபடவேண்டும் என்று தெரிந்து கொள்ளாமல் உழைப்பதில் பயன் யாது. தங்களுடைய அரிய அழகிய பிரஸங்கத்தைப் பலர்முன் செய்து கீர்த்து பெறக் கருதினால், அந்நோக்கம் நிறைவேறிவிட்டதெனச் சொல்லலாம். தேச நலம் ஈடேறாது. எவ்விதத்திலாவது தேச ஸேவையைச் செய்து வருகிறோம் என்பவரிடம் கோட் கூறுதலாகாது. ஆகவே, நாம் இந்த அரிய பிரஸங்கத்திற்காக நவநகர் மஹாராஜாவைப் புகழ்கிறோம். குறைகள் ஸங்கத்தின் முன்பே வெகு அழகாக எடுத்துக் கூறப்பட்டதென்பதில் ஐயமில்லை.

துருக்கி சுல்தான் கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து ஓடிவிட்டார். பிரிட்டிஷாருடைய ரக்ஷணையிலே மால்டாவுக்கு வந்திருக்கிறார். இவர் இவ்விதம் செய்தது தன் துரோக செய்கைகளை புலனாக்கிவிட்டது. இவ்விதம் தான் செய்யாதிருந்தால், வெளியுலகத்தார் அங்கோரா ஸபையினர் அதிக்கிரமமான செயல்களைச் செய்கிறார்கள், என்ற பழி கூறுவார்கள். இப்போது இதற்கு இடமில்லை. இச்செய்தியைக் கேட்டு அங்கோரா ஸபையினர் குர் ஆனை யனுசரித்து ஊஸ்மானியா வம்சத்தில் உதித்த ஆப்துல் மெட்ஜித்தை காலிபா வாக தேர்ந்தெடுத்து விட்டனர். இச்சம்பவத்தை மற்றைய முஸ்லீம்கள் அமைதியுடன் ஏற்று அங்கோரா ஸபையிடம் கோப மூட்டுகிற விரோதிகளுக்கு ஆளாகாது தங்களைக் காக்கவேண்டும்.

அகாலியர்களின் போராட்டம் நின்று விட்டது. லாகூரிலிருக்கும் ஸர் கங்கா ராம் என்பவர் குரு-கா-பாக் நிலங்களை குத்தகைக் கேற்றுக் கொண்டு, கோயில்களுக்கு உபயோகிக்க போதுமான எரிகருவிக்கு வேண்டிய மரங்களை வெட்டிப்போகலாமென அனுமதியிட்டிருக்கிறார். ஆகவே கலகம் அடங்கிவிட்டது. போலீஸ் சேவகர்களும் விலகிவிட்டார்கள். மகந்துவின் தேக பந்தோபஸ்துக்காக மட்டும் சிலர் காவலாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சாப் சட்ட ஸபையில் சீக்கிய குருத்துவாரங்களைப் பற்றிய சட்டமும் எடுபட்டு அங்கீகரிக்கப்பட்டது. இனி நிலத்தில் பிரவேசிக்கிற அகாலியர்கள் எவரையும் போலீஸார் கைதுசெய்ய மாட்டார்கள். விடா முயற்சியுடன் சாத்வீகப் போர் புரிந்த அகாலியர்களும் சிறப்புடன் வெற்றி பெற்றார்கள்; என்றாலும் அதிகாரத்தை விடாது நீடித்து செலுத்திய அதிகாரிகளும் தங்கள் மஹிமைக்கு யாது பங்கமன்னியில் விலகிக் கொண்டனர். இந்நிகழ்ச்சியை கேட்டு யாவரும் மகிழ்வார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற பார்லிமெண்டு அங்கத்தினர் தேர்தல் முடிந்து, பார்லிமெண்டும் வேலையை துவக்கியது. கன்ஸர்வேடிவ் கட்சியினரே எதிர்பார்த்தவாறு பெரும் பகுதியினராக அமைந்திருக்கிறார்கள். ஆகையால் போனர் லாவை முதன்மையாகக் கொண்ட மந்திரி சபை நீடித்து ஆட்சிமுறையைக் கைப்பற்றியது. இக்கட்சியினருக்கு எதிரிடையாக லேபர் கட்சியினரே அதிகமாய் விளங்குகிறார்கள். இக்கட்சியார் மந்திரிஸபை காரியங்களைத் தீவிரமாய் எதிர்த்துப்போராடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இந்தியாவுக்கு யாதொரு முன்னேற்றமும் நிறைவேறாது என்பதை நமது நேயர்கள் உணர்வார்களாக. இந்தியாவுக்குச் சௌகரியங்கள் அளிப்பதில் எக்கட்சியினரும் ஒரு மனப்பட்டவரே. நமது முன்னேற்றத்தை நாமே நாடவேண்டும்.

துருக்கிச்சமாதான விஷயமாய் வல்லரசுகளின் நாடு கூடியிருக்கிறது. துருக்கியர்கள் அப்போதைப் போது வல்லரசுகளின் மனோபாவத்தை தெரிந்து கொள்ளுவதில் ஊக்கத்துடனிருக்கிறார்கள். ஆரம்பமெல்லாம் வெகு நட்புடனே துவக்கமாயிருக்கிறது. உதார நோக்கங்கள் இருகட்சியிலும் வார்த்தைகளால் வெளியாகியிருக்கின்றன. வழக்கம்போல் கமிட்டிகளாகப் பிரிந்து ஒவ்வோர் கமிட்டியும் ஒவ்வோர் விஷயத்தை பரிசீலனை செய்து வருகிறது. நடவடிக்கைகள் வெளியில் அறியாவண்ணம் இரகசியமாய் நடந்தேற எண்ணம் கொண்டிருக்கிறார்களாம். இதனால் என்ன! நடக்கக்கூடியதை முன்னமே யாவரும் அறிவார்கள். இப்போதே நடவடிக்கை முடிந்தேற இரண்டு மூன்று வாரங்கள் ஆகுமென அறிவித்திருக்கிறார்கள்.

அகாலியர் போராட்டத்தில் கைதியானவர்களைப் பற்றிய விவாதம் மட்டும் இனி நிகழும். அதிகாரிகளின் அதிக்கிரமமான செயல்களுக்கு இணங்கி பல துன்பங்களை அனுபவித்த நமது சகோதரர்களின் தீரத்தை நாம் புகழவேண்டும். அவர்களை ஜெயிலிலிருந்து மீட்டுவதற்கு தகுந்த உபாயங்களை தேடவேண்டும். இனி நம்மை அவமானப்படுத்தும் குரூரச்செய்கைகள் அதிகாரப்பேபிடித்த அதிகாரிகளால் நேரிடா வண்ணம் காத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயங்களில் ராஜயபாரம் வஹிப்பவர்கள் நம் குறைகளை செவிகொடுத்துக் கேட்காதிருப்பார்கள். அகாலியர் போராட்டம் நின்று விட்டாலும் அதில் வெளிப்

பட்டிருக்கும் கேடுகள் நீங்கவில்லை. பிரஜைகளை ஆடு மாடு, முதலிய மிருகங்களைப் போன்றும், அதிகாரிகள் இவைகளை எவ்வகையாலும் அடக்க முற்பட்டவர்களென்றும் நினைக்கும் எண்ணங்களை மாற்றி, அதிகாரிகள் பிரஜைகளுடைய ஊழியர்கள் என்பதை உணர்த்த வேண்டும்.

காங்கிரஸ் நிர்வாஹ கமிட்டி இவ்வாரம் கூடி, பிரத்யேக கமிட்டியார் வெளியிட்ட சிபார்சுகளைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள். பொது சட்ட மறுப்பு விஷயமாய் சிபார்சுகள் முழுமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. சட்டஸபை புகுதல் விஷயமாய் விவாதம் நடைபெறுகிறது. தங்களுடைய தேசஸேவையை நன்கு ருசுப்படுத்திய பெரியோர்களே சட்டஸபையில் நுழைந்து ஒத்துழையாமை நடத்தவேண்டுமெனக் கங்கணம் கட்டி வேலைசெய்கிறார்கள். இவர்களுடைய தற்போதைய ஊக்கத்தையும், இதற்குமுன் இவர்கள் செய்திருக்கிற அரிய தியாகத்தையும் நோக்குங்கால், இவர்கள் தங்கள் பிடியை காங்கிரஸிலும் வெற்றி பெறப் பெறுவார்களோவென சந்தேகமுண்டாகிறது. காங்கிரஸில் எவ்வாறு தீர்மானித்தாலும் அத்தீர்மானங்களை அனுஷ்டிப்பதே பொது ஜனங்களுடைய நோக்கமாக யிருக்கவேண்டும். அவ்வாறில்லாது, காங்கிரஸ் பிரிவினையேற்பட்டால், ஒத்துழையாமை இயக்கத்திற்கு தீங்கிழைத்தலாகும். பொதுஜன வுணர்ச்சியைக் கருதி, கூடிய வரையில் தலைவர்கள் இணங்கினால் உத்தமம்.

இங்கிலாந்தில் வேலையில்லாமல் தவிக்கும் வேலையாளர்கள் தங்கள் குறைகளை முதன் மந்திரியிடம் முறையிட ஸைநிய கோலத்துடன் லண்டனுக்கு வந்திருக்கிறார்கள். இதுவரை, முதன் மந்திரி தன்னைக்காண்பதற்கு இடங்கொடுக்கவில்லை. இவ்வேலையாளர்களின் எண்ணிக்கையை நோக்குமளவில், கவலைக்கிடமாயிருக்கிறது. கத்தி துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் விளங்குகிறார்களாம். ருஷ்யாவில் ஸோவியட் கட்சியார் தங்களுடைய கொள்கைகளை வெளி நாடுகளிலும் பரவச் செய்யும் செயலால் இது உண்டாயதோவெனத்தோன்றுகிறது. ஹாரிங்டன் என்பவர் இவர்களை சமயம் வாய்த்தபோது எதிர்ப்போராடும் படியும் தூண்டுகிறாராம். போலீஸார் இவர்கள் பார்லிமெண்டு கூடும் ஸ்தலத்தின் அருகில் வராதவாறு தடுத்துவருகிறார்கள். சில தலைவர்களும் கைதியாக்கப்பட்டிருக்கிறார்களாம்.

நமது சட்டஸபைகளில் நடந்தேறும் காரியங்களை நோக்குங்கால், பொறுப்புள்ள உத்தியோக பதவிகளில் அமர்ந்திருக்கும் நம் இந்தியர்களடைந்திருக்கும் முன்னேற்றம் ஓர் விதத்தில் பலித்து விட்டதென்றே சொல்லல் வேண்டும். சட்டஸபை அங்கத்தினர் அரசாங்க விஷயங்களில் பல கேள்விகள் கேட்பதும், அவைகளுக்கு நிர்வாக அதிகாரிகள் கௌரவத்துடன், கேள்விகளுடைய நோக்கம் ஈடேறுதவாறு, விடை பகருவதும் வழக்கமாயிருக்கிறது. இவ்விதவிடையளிப்பதில் நம் இந்திய நிர்வாக அதிகாரிகளும் குருவுக்கு மீறிய சிஷர்களாக யிருக்கிறார்கள். இத்தேர்ச்சிபெற்றது புகழத்தக்கது. ஆனால் பார்லிமெண்டில் நடக்கும் விதம் வேறாயிருப்பதென்றால், அங்கு பொது ஜனங்களால் ஏற்படுத்திய அரசாங்கமன்றோ! இங்கு அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டஸபைதானே. இங்கு அரசாங்க அதிகாரிகளுடைய கௌரவம், அங்கு ஜனப்பிரதிநிதிகளுடைய கௌரவமும் மதிக்க வேண்டியதே.

போல்பூரில் சாந்தி நிகேதனம் போன்றும், ஹரித்வாரத்தில் குருகுலம் போன்றும், ஸபர்மதியில் ஸத்தியாகிரஹாச்ரமம் போன்றும், நம் தமிழ் நாட்டில் நம் புராதன கல்வியை பழைய முறைப்படி சிறுவர்களுக்குப் புகட்ட நோக்கங்கொண்டு கள்ளிடைக்குரிச்சியில் தமிழ்குருகுலவித்தியாலயத்தை நிர்மாணிக்க துவங்கியிருக்கும் அரியதேசபக்தருடைய தேசஸேவையை பெரிதும் மனமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். இந்த ஸ்தாபனத்திற்கு பொருளுதவி செய்ய தென்னிந்தியாவில் யாவரும் முன்வந்து இம்முயற்சி பலனடையுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம். தமிழர்கள் தேச கைங்கரியத்தில் பின்வாங்குபவர்கள் என்று இருந்துவரும் கூக்குரலைப் பொய்யாக்கி தாய் நாட்டிலும் தாய்ப் பாஷையிலும் நமக்கிருக்கும் உயர்ந்த பக்தியை உறுதிப்படுத்துவதற் கேற்ற சமயம் இதே.

சட்ட ஸபை அங்கீகரிக்காததால் நமது ராஜப் பிரதி தன் விசேஷ அதிகாரத்தை உபயோகித்து சட்டமாக்கிய சுதேச மன்னர்களின் காப்புச் சட்டம் இப்போது பிரிடிஷ் பார்லிமெண்டு முன் வைக்கப்பட்டிருக்கிறதாம். விவாதங்கள் ஏற்படுமேயென்ற பீதி அதிகாரிகளுக்கில்லையாம். சுயராஜ்யமென்றால், பொது ஜனங்களுக்கே ஸர்வாதிகாரமிருக்கவேண்டும். ராஜப்பிரதிநிதி ஜனப்பிரதிநிதி சபைக்கு இணங்கவேண்டும். ஜனப்பிரதிநிதிகள் நியாய விரோதமாயும் அல்லது தேச நன்மைக்கு மாறான வழியிலும் நடந்துகொண்டால், புதிதாக ஜனப்பிரதிநிதி ஸபை தேர்ந்தெடுக்கவோ, அல்லது பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளவோ வழிதேடவேண்டும். அதிகாரம் கடைசியாய் எங்கு குடிகொண்டிருக்கிறது என்ற விஷயமே அரசாங்க ஸ்தாபனத்தில் முக்கியமான அம்சம். இந்திய அரசாங்க சீர்திருத்தத்தின் நிலையை அறிந்தே, ஒத்துழையாதார் முற்பட்டுளர்.

சுவிட்ஸர்லாந்தில் மலைப்பிரதேசங்களின் அழகையும், மற்ற ரமணீயமான இயற்கை யமைப்புகளையும் கண்டு களிக்க பலநாடுகளிலிருந்தும் ஜனங்கள் கோடை வஸந்த காலங்களில் கூடுவார்கள். மலைகள் மேலேறுவது இப்பிராந்தியங்களில் அபாயகரமானது. பனிக்கட்டிகள் அருவிகளாகச் சேர்ந்து வெகு உயரத்திலிருந்து ஓடிவரும். அவைகளுடைய பாரம் தாங்காது சிற்சில விடங்களில் கற்பாறைகள் உடைந்து கீழேவிழும். உயிர்ச்சேதங்கள் அநேகம் ஏற்படும். இப்போது கட்ட நிர்மாண நிபுணர்கள் பிரயாணிகளை மலைமேல் இவ்வபாயங்களில்லாமல் கொண்டுசேர்ப்பதற்கு வழி செய்திருக்கிறார்கள். கம்பியில் தொங்கிக்கொண்டு ஓடும் இலேசான வண்டிகளில் பிரயாணிகள் கீழே விநோதங்களைகண்டு மகிழ்ந்துகொண்டு போகலாம். மின்சார சக்தியால் வண்டிகள் இழுத்தோட்டப்படுகின்றன. ஒவ்வோர் வண்டியிலும் இருபது மனிதர்களுக்குத்தான் இடமுளது. அங்கு பல விநோதங்களிலும் இது ஒரு புதிய விநோதம்.

சிபிச் சக்ரவர்த்தி

[காரைச்சிவனடியார் திருக்கூட்டத்தார்]

நமது நாட்டை அரசாண்ட பல மன்னர்களில் சிபிச் சக்ரவர்த்தி யொருவர். இந்த உலகத்திலுள்ள அரசர்களியாவரும் கப்பங்கட்டிவரத், தாம் மன்னர் மன்னனாக சக்ரவர்த்தியாக விருந்து அரசாண்டு வந்தார். இத்தனை செல்வம் அவருக்கிருந்தாலும் அவை யாவும் கடவுளுடைய சொத்து என்று கருதி, டம்பம் அகங்காரம் முதலிய கெட்ட குணங்களின்றி, நீதி செலுத்திவந்தார். அப்படி யிருந்த நாள்களில் ஒருநாள் சிபிச் சக்ரவர்த்தி தமது பூங்காவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அப்போது ஆகாயத்தில் ஒரு பெரிய பருந்தால் துரத்தப்பட்டுக் களைத்துப்போன ஒரு ஏழைப் புறாவான துடித்துக்கொண்டு அரசனுக்கு முன்னால் வந்து விழுந்தது. அதன் பரிதாபத் தன்மையைக் கண்ட அரசன் இரக்கப்பட்டு அதனைக் கையிலெடுத்துத் தடவிக்கொடுத்து அதன் களைப்பையும் பயத்தையும் மாற்றினார். அப்போது பருந்தானது "ஏ சக்ரவர்த்தி! எனது பசியினிமித்தம் இநதப் புறாவைத் துரத்திக்கொண்டுவந்தேன். அது என்னுடைய உணவாகும். அதனை நீர் எடுத்துக்கொள்வது தருமமல்ல. அதனை என்னிடம் கொடுத்துவிடும். நாங்கள் சாக பக்ஷணம் செய்வதில்லை. எப்போதும் நாங்கள் மாமிச போஜனமே செய்து வருகிறோம். ஆதலால் நான் துரத்திவந்த புறாவை என்னிடம் கொடுத்துவிடுவதுதான் தர்மம்" என்றது.

அரசன் இதைக்கேட்டு, "உண்மைதான்; ஆனால் அந்தப் புறாவானது பயந்து கண்ணீர்விட்டு அலறிக்கொண்டு என்னிடத்திற்கு வநதபடியால் அதனைக்கொல்ல நான் சம்மதியேன். அதற்குப் பதிலாக நீ எதைக்கேட்டாலும் தருகிறேன்" என்று கூறினார். இதைக்கேட்ட பருந்து, "எனக்கு உம்முடைய எந்த செல்வமும் தேவையில்லை; பசிக்கிறது; அதனைத் தீர்க்க ஏதாவது மாமிச உணவு வேண்டும். அதுவும் அந்தப் புறாவின் அளவு தந்தாற் போதும்" என்றுரைத்தது. அரசன் சந்தோஷப்பட்டு ஒரு தராசு கொண்டுவரச் செய்து ஒரு தட்டில் அந்தப் புறாவை வைத்துவிட்டுத் தன் உடைவாளை யுருவித் தன் தொடையை அறுத்து சதையைக் களைந்தெடுத்து மற்றொரு தட்டில் வைத்தார். ஒரு துண்டு, இரண்டு துண்டாகப் பலமுறை அறுத்தறுத்து வைத்தார். என்றாலும், புறாவின் தட்டு கீழே யிருந்தது. தன் சரீரத்திலிருந்த சதை முழுமையும் கத்தியால் அரிந்து முடியவே, கடவுளுக்கு அருள் சுரக்க, சிபிச் சக்ரவர்த்திக்கு அழிவற்ற மோக்ஷவின்பம் நல்கினார். வேறொரு அறிவற்ற பக்ஷியால் கொல்லப்படவிருந்த ஒரு புறாவை ரக்ஷிப்பதற்காக ஒரு பெரிய சக்ரவர்த்தி தமது சதையை நறுக்கி யீடாக்கி அவ்வுயிரைக் காப்பாற்றினார். இப்போது ஆறறிவுள்ள மனிதர்களாகிய நாம் நமது சதை வளருவதற்கென்று கருதிப்பல வுயிரைக் கொல்லலாமா? நமக்கு சிபிச்சக்ரவர்த்தி யவ்வளவு இரக்கமில்லாவிட்டாலும் கொஞ்சமாவது வேண்டாமா? நாம் மற்ற ஜீவனிடத்தில் இரக்கங் காட்டாவிட்டால் கடவுள் நம்மிடத்தில் எதற்காக இரக்கங் காட்டவேண்டும். நமக்குப் பிள்ளை பிறக்க வேண்டுமென்று ஆடு கோழிகளின் பிள்ளைகளைக் கொல்லலாமா? எல்லாவுயிர்களையும் தமது பிள்ளைகளாகக் கருணைகாட்டி ரக்ஷிக்கும் கடவுள் நமக்குக் கிருபை புரிவாரா? கடவுளருள் வேண்டுமானால் ஒரு உயிரையும் கொல்ல எண்ணாதீர்கள்!

தில்லை வாழந்தணர்

(துகளன் எழுதியது)

செப்பத் தகுபுகழ்த்தில்லைப் பதியிற் செழு மறையோ, ரொப்பப் புவனங்கண் மூன்றினுமும் பரினாரெரித்த, வப்பர்க்கமுதத் திருநடர்க்கந்திப்பிறை யணிந்த, துப்பர்க்குரிமைத் தொழில் புரிவோர் தமைச்சொல்லுதுமே.

பீடுடைய புலியூர் எனவும், பெருமையார் புலியூர் எனவும், அனைத்துலகுந் தொழுந்தில்லை எனவும், திருத்தமாந்தில்லை எனவும், திண்ணுண்ட திருவே மிக்கதெனவும், சிறந்து விளங்குவது வித்தகனார் விளையாடல் விளங்கும் சிதம்பரத் தலம். பதஞ்சலி வியாக்ரபாதர் முதலிய முனிவரும் விஷ்ணு இந்திரன் முதலிய தேவரும் காண

"வேதங்களோதி ஓர்வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேதகீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கி"

ஆனந்த நடனம் புரிந்தும் "குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால் வெண்ணீறும் இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமும்" தோன்ற,—செந்தீ முழங்க, "கடுத்தாடு கரதலத்திற் றமருகமும் எரியகலும் கரிய பாம்பும் பிடித்தாடி" அர்ச்சாரூபமாய் இன்றும் விளங்குகின்றார். கடிகொள் பூஞ்சோலைகளும் வண்டு பண்பாடும் சோலைகளும் சூழப் பொலிந்தது இத்தில்லைமாநகர்; இங்கு கடவுளைத் தம் சீலத்தாற் தொழுது ஏத்துவோராய் முட்டாத முச்சந்தி மூவாயிரவர் என்று சிறப்புற்ற அந்தணர் வாழ்நதனர்; இவர் எல்லோரும் கடவுளருக்கு அநவரதம் தொண்டு புரியும் பேறுபெற்று மறைகளாற் துதித்தும், மங்கலத்தொழில்கள் செய்தும், தானமும் தவமும் வல்லாராய், ஊனமேயொன்றும் இல்லாராய். முதல்வனாரை இம்மையே பெற்று இனிப்பெறும் பேறு ஒன்றும் இல்லாதவராய் விளங்கினர்; இந்த மூவாயிரவரும் மறுவிலா மரபின் வந்தவர், மாறிலா வொழுக்கம் பூண்டவர்; யஜனம் யாஜனம் தானம் பிரதிக்கிரகம் அத்தியயனம் அத்தியாபனம் ஆகிய அறுதொழிலும் நன்குற ஆண்ட வேதியர். திருஞான சம்பந்த நாயனார் தில்லைத்தலத்திற்கு எழுந்தருளிய போது,

"நீலத்தார் கரியமிடற்றார் நெற்றிமேலுற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையாராய்"

இவர்கள் அனைவரும் சிவனுருக்களாகத் தோற்றல் கண்டு வியந்து, திருநீலக்கண்ட யாழ்ப்பாணருக்கும் அவ்வதிசயத்தைக்காட்டி, சிட்டர் வாழ் தில்லை எனவும், உலகுக்கெல்லாந் திருவுடையந்தணர் வாழ்கின்ற தில்லை எனவும், புகழ்ந்து அநாதிகாலமாய் இவர்கள் இங்கு இருத்தலை யுணர்ந்தும் "இச்சிட்டர் பாலணுகான் செறுகாலனே" என்றறிந்து
"செல்வநெடு மாடஞ்சென்று சேணோங்கி
செல்வமதி தோயச் செல்வமுயர்கின்ற"
செல்வர் என்று இவர்களைப் போற்றினார் என்பது இவர் பாடிய பதிகங்களின்றும் வெளிப்படுகின்றது.

இவ்வந்தணர் மூவாயிரவரும் தாம் பெற்ற நாளெல்லாம் பெரும்பற்றப் புலியூரானையே பேசுவோராய், தக்கன்வேள்வியிற் சந்திரனைச் சாடவெடுத்ததும், காலனை வீட வெடுத்ததும், நாரணனுன்முகனுந்தேட வெடுத்ததுமான பாதத்தை தில்லையில் ஆடவெடுத்திட்ட கோலத்தை அகத்தும் புறத்தும் காண்போராய் அம்பலவன் குணமேபரவுவோராய், அவனுக்கு எல்லையில்லாததோர் அடிமை பூண்டவராய் அம்பலத்தைத் 'தலையால் வணங்கித் தலையானார்'களாய் இருப்பதையுணர்ந்த சிவபெருமான், திருத்தொண்டத் தொகையைப் பாடும்படி முதலடியாகிய "தில்லை வாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று சுந்திரமூர்த்தி நாயனாருக்குத் துவக்குவித்தார் என்பது கர்ண பரம்பரையாயும் சேக்கிழார் புராண மூலமாயும் வருகின்ற விஷயம். ஆகவே, இங்கும் அறுபத்து மூவரைப்பற்றி எழுதத்தொடங்கு முன் இவர்களை கூறுதல் பொருந்தும். கடவுளரும் இவர்கள் போல் ஒரு வேதியராய் விளங்குவார் என்றால் இவர்களது பெருமையைக் கூறலாமோ?

நாலு வேதங்கள் ஆறு அங்கங்கள் நாலு உபாங்கங்கள் ஆகியவற்றை யெல்லாம் நன்குணர்த்த வல்லூரான இவரை "ஊறுமின் றமிழா லுயர்ந்தார்" என்று திருஞான சம்பந்த நாயனார்கூறியிருப்பதினின்று இவர்களின் தமிழ் தேர்ச்சியே மேம்பட்டு நின்றது என்று கிடைக்கின்றது; இது காரணம்பற்றியே கம்பநாட்டாழ்வார் இவர்கள் முன்னிலையில் தமது இராமாயணத்தைப்பாடி அரங்கேற்றி சாற்றுக்கவி வாங்குவதற்குப் பலநாள் காத்திருந்தார் என்றும், சர்ப்பத்தால் இறந்த ஒரு குழந்தை உயிர்பெற மூன்று வெண்பாக்களை பாடி அவ்விடத்துக் கூடியிருந்த மூவாயிரவரையும் அப்பொழுது இராமாயணத்தைக் கேட்கச் செய்தார் என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் இவ்வெண்பாக்கள் புதுவைச் சேதிராயனைத் தீண்டியவிடம் தீரப்பாடப்பட்டவை என்று 'தமிழ் நாவலர் சரிதை' கூறுகின்றது. இவர்கள் அர்ச்சாரூபராய் எக்காலத்தும் இருப்பினும், கம்பநாட்டாழ்வார் காலம் வரை இவர்கள் மானுடவுருத்தாங்கி யிருந்தனர் என்று சொல்ல முடியாது; திருஞான சம்பந்த நாயனார் காலத்தில் இவர்கள் அப்படி இருந்திருக்கலாம் என்று ஊகிக்க அவரது பதிகங்கள் இடங்கொடுக்கின்றன; ஆயினும் அவருக்கு முன்பேயிருந்து அவர் காலத்திலேயே தெய்வ வேதியராகி விளங்கியதையே நாயனார் கூறுகின்றனர் எனவும் கொள்வதற்கிடமுண்டு. மூவாயிரவர் என்ற பெயர் பரம்பரையாய் இவர்கள் வம்சத்தினருக்குச் சிறப்புப் பெயராக விளங்கியது போலும்; அல்லது, சுந்திரமூர்த்தி நாயனார் காலத்தில் இவர்கள் மூவாயிரவராய் இருந்ததுபற்றி அது தொட்டு அப்பெயர் இவர்களுக்கு வழங்கலாயிற்று என்று அவரது திருப்பதிகத்தினின்றும் கொள்ளவும் கூடும்.

அதே நாயனார் திருப்பதிகத்தில்

"உரிமையாற் பல்லவர்க்குந் திறைகொடா மன்னவரை
[மறுக்கஞ்செய்யும்
பெருமையார் புலியூர்."

என்பதினின்றும் இம்மூவாயிரவர் பல்லவரின் அரசு ஓங்கித்தழைத்த காலத்திருந்தனர் என்று கொள்ளவும் கூடும்.

இவர்கள் இருந்த காலம் ஏதாயினும் இவர்களினாலேயே தில்லைமூதூர் 'கோயில்' என்ற தனிப் பெயர் பெற்று 'வேள்வியோ வாத்தில்லை' 'தினைத்தனை வேதங்குன்றாத்தில்லை' 'பெரியோர்கள் புலியூர்' என்றவாறெல்லாம் சிறப்புற்று இன்றும் விளங்குகின்றது.

ஸர்வதேசஸங்கமும் இந்தியாவும்

(உதவி பத்திராதிபர்)

(சென்னையில் விளம்பர சபை ஒன்றுளது. அது ஆதியில் மகாயுத்தத்தைபற்றிய சமாசாரங்களை அரசாங்கத்தார் சார்பில் வெளியிட்டு வந்தது. யுத்தத்திற்குப்பின் அச்சபை அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்ட ஸ்தாபனங்களின் நன்மைகளை வெளியிடுவதென்றும் பத்திரிகைகளில் வெளியாகும் மாற்றபிப்பிராயங்களை மறுப்பதென்றும், கைத்தொழில், விவசாயம் சுகாதாரம், இவைகளின் முற்போக்குக்குற்ற உபாயங்களை விளம்பரம் செய்வதென்றும் முற்பட்டிருக்கிறது. இப்போது அச்சபையால், ஸர்வதேச ஸங்கத்தின் கருத்தையும் அமைப்பையும் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் பொது ஜனங்கள் ஸர்வ தேசஸங்கத்தைப்பற்றி எவ்வாறு எண்ணுகிறார்கள் என்பதை ஈண்டு விளக்குவோம்.)

மஹாயுத்தம் துவங்குமுன் பல தேசங்களின் சில்லரை சச்சரவுகளை தீர்ப்பதற்கென்று பல ஸ்தாபனங்கள் இருந்துவந்தன. அந்த ஸ்தாபனங்களிடும் தீர்மானங்களெல்லாம் சிபார்சுகளாக எண்ணப்பட்டனவே யொழிய அவற்றை எல்லா தேசத்தாரும் தவறாமல் பின்பற்ற வேண்டியதென்ற ஓர் கட்டுப் பாட்டை யாவரும் இயற்றினாரில்லை. சிலர் அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். சிலர் நிராகரித்தார்கள். ஹேக் கில் பன்முறை கூடிய ஸபை முன் நடந்தேறிய விவாதங்களி லிருந்து இவை புலனாகும். ஜர்மானியர்கள் இந்த ஸ்தாபனங்களைக் கூட்டுவதில் வெகு ஊக்கத்துடன் முயற்சி செய்தவர்களே. யுத்தம் தொடங்கிய பின் ஜர்மானியர்கள் பலத்தையே பெரிதாக மதித்து இதர தேசங்களுடைய உரிமைகளை கவனிப்பதில்லை யெனவும் யுத்த நீதிகளைக் காப்பாற்றுவதில்லை யெனவும், அச்செருக்கை யடியோடு ஒழிக்கவேண்டு மென்று வல்லரசுகள் முறையிட்டுப் போர் புரிந்து வெற்றி பெற்றார்கள். பின்னர், யுத்தத்தில் நிகழ்ந்த கெடுதல்கள் இனி நிகழாவண்ணம் யுத்தத்தையே கூடியவரையில் தடுப்பதற்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்ய வேண்டு மென்று வல்லரசுகள் முற்பட்டிருக்கிறார்கள். ஸர்வ தேச ஸங்கமொன்றை நிர்மாணித்திருக்கிறார்கள்.

இச்சங்கத்தில் சேருவதற்குமுன், இச்சங்கத்தை நிர்மாணித்த நிபுணர்களின் மனோபாவத்தையும் செயலையும் தீர ஆராய்ந்தே சங்கத்தில் அங்கத்தினராகச் சேருவது இயல்பே. சங்கமும் சில வருஷங்களாக வேலை செய்திருக்கிறது. அதில் தற்சமயத்தில் 51 தேசங்கள் பிரதி நிதிகளை வைத்திருக்கின்றன. அமெரிக்கா என்ற காரண இடுகுறிப் பெயரால் வழங்கப்படும் யுனைடட் ஸ்டேட்ஸ் இச் சங்கத்தில் சேராமல் வாஷிங்டனில் ஓர் மகாநாடு கூட்டி யுத்தக்கப்பல்களும், சைன்யங்களும் தேசங்களுக்கேற்றவாறு ஒருவரையறைக் குட்படக் குறைக்க வேண்டுமென நோக்கங் கொண்டு நடந்த விவாதங்களும், அம்மகா நாட்டின் பயனின்மையும் நன்கு கண்டு கொண்டோம். ஸர்வதேச ஸங்கம் செய்திருக்கிற வேலைகளையும் நன்றாய் தெரிந்து

கொண்டிருக்கிறோம். இவைகளிலிருந்தும் ஐரோப்பிய தேசங்களுடைய இதர செயல்களினின்றும் உதார நோக்கங்கள் வார்த்தைகளோடு மட்டுந்தானென்றும், அவ்வுதார வார்த்தைகளால் சங்கத்தின் வாயிலாக தங்கள் தங்களுடைய சுயநலங்களை பேரரசுகள் சிற்றரசுகளிடமிருந்து பெற முயல்வதைத்தவிர்த்து வேறு யாது நோக்கங்களும் கைகூடாதெனவும் கற்றுக்கொண்டு விட்டோம். நன்னோக்கங்களையே கைக்கொள்வதென்றால் ஜர்மனி, ஆஸ்டிரியா, துருக்கி, ருஷியா இவைகளையும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு இப்போது துருக்கி சமாதானத்தை ஏன் இச்சங்கமே தீர்மானிக்கக் கூடாது.

அஹிம்ஸா தர்மங்களையும், யுத்த நியாயங்களையும், ராஜநீதிகளையும் இந்தியர்களான நாம் ஐரோப்பியர்களிடமிருந்து கற்க வேண்டிய அவசியமில்லை; நாம் பின்பற்றிய ஆசார வியவஹாரங்களும், கற்கும் புராதனக் கல்வியும், படிக்கும் புராண சரிதங்களும் இந்த தர்மங்களை நன்கு விளக்குகின்றன. இந்த நீதிகள் இந்தியர்களிடமே வழங்கக்கூடியன. ஐரோப்பாவில் இம்முறைகள் பொருந்தா. அவர்களுடைய நடையும், கல்வியும் இம்முறைகளுக்கு ஏற்றனவாயில்லை. இதற்கு அத்தாட்சியாக வீரர்களான அகாலியர்கள் நடத்திய சாத்விகப் போராட்டத்தையும், அயர்லாந்தில் நிகழ்ந்த அழிவு போராட்டத்தையும் எடுத்துக்கூறலாம். இப்போது ஸர்வதேச ஸங்கத்திற்கு இந்தியா தேசத்து பிரதிநிதியாக அமர்ந்திருப்பவர் இந்திய பொது ஜனங்களின் பிரதிநிதி யல்ல. அச்சங்கத்திற்கு செலவுக்காக செலுத்தும் வரியும் பொது ஜனங்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாகவே செலுத்தப்படுகிறது. பிரதிநிதிகள் செய்யும் காரியங்களெல்லாம் ஒரு விதத்திலும் இந்தியாவுக்குப் பயன்படாது.

ஏகாதசி விரத மாகாத்மியம்

(N. R. ஐயர், B. A., B. L.)

ஜனங்கள் யாவரும் அடைவதற்கு ஆசைப்படுகிற முக்தியின் வாயிலானது, மிகவும் பிரகாசித்துக்கொண்டு வட்டமாயுள்ள ஓர் வஸ்துவினால் மூடப்பட்டிருக்கிறது; ஹே புராண புருஷா, என் சஞ்சலத்தை நீக்கி, நான் உன்னைக்காணும்படி, அம்முக்தியின் வாயிலினின்றும் அதை மூடியிருக்கும்படியான வஸ்துவை யகற்றுவாயாக (ஈசோபநிஷத்-15)

ஏகாதசி: எல்லா ஹிந்துக்களும் ஏகாதசியானது ஒரு திதியென அறிவார்கள். ஒரு அமாவாஸ்யையின் முடிவுகாலத்திலிருந்து மற்றொரு அமாவாஸ்யையின் முடிவுகாலம் வரையுள்ள காலத்தை முப்பது திதிகளாக பிரித்திருக்கிறார்கள். சுக்லபக்ஷ பிரதமையிலிருந்தும் கிருஷ்ணபக்ஷ பிரதமையிலிருந்தும் பதினொன்றாவது திதியானது ஏகாதசி. இவ்வாறாக சாந்திரமான மாதத்திற்கு இருமுறை ஏகாதசி வருகிறது.

ஏகாதசியில் சூரிய சந்திரன்களின் பரஸ்பர நிலை: ஒரு திதியானது ஓர் தினத்தின் 98 சதாம்சம் கொண்டது. நக்ஷத்திரத்தின் காலம் 101 சதாம்சம். பதினொன்று திதிகளுக்காக இவைகளிடை ஏற்படும் வித்தியாசம் சிறிதாகையால் அதனை பொருட்படுத்த வேண்டுவதில்லை. ஓர் அமாவாஸ்யை கூடிய நக்ஷத்திரத்திலிருந்து பதினோராவது நக்ஷத்திரம் சந்திரன் சேரும்போது ஏகாதசியெனச்சொல்லலாம். இராசி ஒன்றுக்கு $2\frac{1}{4}$ நக்ஷத்திரமாக, சுக்லபக்ஷ ஏகாதசி தினத்தன்று சந்திரன் சூரியனிடமிருந்து ஐந்தாம் இராசியிலிருப்பான். இவ்விதமே கிருஷ்ணபக்ஷ ஏகாதசிதினம் பதினோராவது இராசியில் இருப்பான்.

மேற்கூறிய நிலையின் முக்கியாம்சங்கள் ஜோதிட சாஸ்திரத்தினின்று நாம் அறிவது யாதெனில்: கிரஹங்கள், சூரியனுக்கு சமீபத்திலிருந்தால் அவை நமக்குத்தோன்றா என்பதாம். அவை நமக்குத் தோன்றாததின் காரணம் என்னவெனில், அக்கிரஹங்களின் ஒளியானது சூரியனுடைய ஒளியில் மறைந்து விடுகிறது. அப்பொழுது அக்கிரஹங்கள் 'அஸ்தங்கத'த்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அச்சமயத்தில் அக்கிரஹங்கள், கிரஹிக்கிற சிறு வெளிச்சமும், சூரிய ஒளியின் வெளிச்சத்தால் தடுக்கப்பட்டு மறைகிறது. அக்கிரஹங்கள் சூரியனைவிட்டு அதிக தூரம் செல்லச்செல்ல அவைகளுடைய ஒளியும் அதற்குத் தகுந்தாற்போல் அதிகமாய்க் கொண்டே வருகிறது. இது யாவரும் பார்த்து எளிதில் அறிந்துகொள்ளக்கூடியதுதான். சூரியனைவிட்டு புதன் 29°க்கப்பாலும், வெள்ளி 47°க்கப்பாலும், இதர கிரஹங்கள் 180°க்கப்பாலும் (அதாவது நேரெதிராயிருக்கும்போது) பிரகாசிக்கின்றன. சந்திரன் சூரியனுக்கெதிராய் இருக்கும்பொழுது (அதாவது 180°க்கப்பால்) மிகப் பிரகாசிக்கிறது.

பிறகு கிரஹங்களின் வீக்ஷண்யங்களைச் சற்று கவனிப்போம். சூரியன் முதலாய எல்லா கிரஹங்களும் 3, 10, 11, இவ்வீடுகளை கால் வீக்ஷண்யத்தோடும்; 5, 9, இவ்வீடுகளை $\frac{1}{2}$ வீக்ஷண்யத்தோடும்; 4வது, 8வது, இடங்களை முக்கால் வீக்ஷண்யத்தோடும்; 7வது இடத்தில் மட்டும் பூர்ண வீக்ஷண்யத்தோடும் பார்க்கின்றன. 2, 6, 12, இவ்விடங்களில் சூரியன் பார்வையிடுவதில்லை. 2, 12, இவ்விடங்கள் சூர்யனுக்குச் சமீபத்தில் இருக்கின்றன. ஆதலின் 6வது இடமே சூரியனுடைய பார்வையில் இல்லாமல், சௌக்கியமாக சந்திரனுடையதாக இருக்கிறது.

சூரியன் எல்லா கிரஹங்களைவிடப் பெரியதென்றும் எல்லாவித சக்திக்கும் அதுவே மூலாதாரம் எனவும், நாம் ஜோதிட சாஸ்திரத்தினின்றும், வான சாஸ்திரத்தினின்றும் அறிகிறோம். சூரியன் 9 அடி Diameter உள்ள ஒரு நெருப்புப் பந்தென்றால், சந்திரன் குளிர்ந்ததும் உயிரிழந்ததுமான பட்டாணிக்கடலையையொத்த ஒரு உருண்டை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகவும் உண்மையே.

அப்படிப்பட்ட நெருப்புப்பந்தானது சந்திரனைப்பார்வையிடும்போது, அதன் நிலைமையை நாம் சிறிது கவனிக்கவேண்டும். சக்தியும், உஷ்ணமும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளும்படியான தன்மையுள்ளவை. சந்திரன் மேல் சூரியனது உஷ்ணமானதும், ஒளியைத் தரும்படியுமானதுமாகிய கிரணங்கள் பட்டால், நாம் அதிக ஜ்வரத்தில் எப்படித் தவிப்போமோ அப்படியே சந்திரனும் தவிக்கும் இக்கஷ்டத்தினின்று விடுபட்டு, யதேச்சையாயிருக்கும்படியான இடம் சந்திரனுக்கு 6வது வீடுதான். இங்கு நாம் கிருஷ்ணபக்ஷ ஏகாதசியைப்பற்றிப் பேசவேண்டியதில்லை; 11ம் இடத்தில் இருப்பதாலும் $\frac{1}{4}$ பார்வைபெற்றிருப்பதாலும் அதை விட்டுவிடுவோம்

இவ்விடத்தில் சுக்லபக்ஷத்தை மட்டுமே யெடுத்துக்கொள்வோம். கிருஷ்ணபக்ஷம் நற்கருமங்களுக்கு ஏற்றதல்லவென்று பிரச்னோபநிஷத் கூறுகிறது.

ஐந்தாவது இடத்தின் கடைப்பாகமும், ஆறுமிடத்தின் முதற் பாகமும், சூரியன் பார்வையிடும் நான்காவதிடத்திற்கும் ஏழாவதிடத்திற்கும் நடுவேயிருக்கிறது. சந்திரன் இந்நிலையிலிருக்கும் பொழுதுதான் ஏகாதசி நேரிடுகிறது. துவாதசியும் ஏகாதசியைப்போலவே உசிதமான இடத்திலிருக்கிறது என்று சிலர் சொல்வார்கள். ஆனால் சூரியன் பூர்ண வீக்ஷண்யத்துடன் இருக்கும்படியான ஏழாமிடத்திற்குச் சமீபத்திலிருக்கிறது துவாதசி சந்திரன்; ஏகாதசியன்று சந்திரன் நான்காம் இடத்திலிருந்தும் ஏழாமிடத்திலிருந்தும் சமதூரத்திலேயே யிருக்கிறது.

கலிபுருஷனுக்கு பூமி ஆத்மா; சந்திரன் மனஸ்; நமக்கு சூரியன் புத்திகூர்மைக்கும் ஆத்மசக்திக்கும்; சந்திரன் ஞானத்திற்கும், தேகாம்சத்திற்கும் மூலாதாரங்கள். சூரியகிரணமானது, அமாவாஸ்யை, பௌர்ணமி தினங்களில் சந்திரன் மேல் அதிகமாக விழுகிறது. அச்சமயத்தில் சந்திரன் மிகவும் தத்தளிக்கின்றது. நமக்கும் மேற்கூறிய இரண்டு நாட்களும் கெடுதலானவைகள்தாம். வியாதியஸ்தர்கள், பைத்தியக்காரர்கள் இவர்களுடைய ஜீவன் அந்நாட்களில், ஒரு வழியில் நில்லாமல், தாமரைத்தண்ணீர்போல் தத்தளித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் மேற்கூறியது நன்கு விளங்கும். ஒரு ஜாதகத்தில், சந்திரன் கேந்திரத்திலிருந்தால் மிக எளிய தென்றும், நீசத்திலிருந்தால் மத்தியமம் என்றும், உச்சத்திலிருந்தால், மிக நல்லது என்றும் பலாபலன்கள் கணிக்கப்படுகிறது.

ஏகாதசி தினங்களில் நாம் செய்யவேண்டியது :

ஏகாதசி தினங்களில், சந்திரன், தத்தளிக்காமலும், சீக்கிரம் கட்டுப்படுத்தக் கூடியதாயுமிருக்கிறது. அதே காலத்தில் நமது மனஸும் நமது ஆளுகைக்கு உட்படும். ஆகையால் அப்பொழுது நாம் கடவுளை தியானம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். மனதையும் பிராணனையும் அடக்காதவரை, பஞ்சேந்திரியங்களின் வலைக்குட்பட்டே ஜீவன் வருந்தவேண்டும். பிராணன், மனது இவ்விரண்டையும் கட்டுப்படுத்தி நமது ஆளுகைக்குக் கொண்டுவந்தால் நாம் முக்தியை அடைவோம். எவனொருவன் பிராணன், மனது, இவ்விரண்டில் ஒன்றை கட்டுப்படுத்துகிறானோ, அவன் மற்றதையும் அடக்கிவிடுகிறான். பிராணனும், பூர்வகன்மவாசனையும், மனஸை தத்தளிக்கச் செய்கிறது. இம்மூன்றில் ஒன்றையாவது நாம் ஒழிப்போமேயாகில், மற்றிரண்டும் தானாகவே யொழிந்திடும். ஆனால் நாம் சிறிது சிறிதாகவாவது மூன்றையும் ஒழிக்க முயலவேண்டும்.

பிராணாயாமத்தை எவனொருவன் விடாமல் தினமும் அப்பியசிக்கின்றானோ, அவன் பிராணனை சுஷும்ன நாடியில் செலுத்தி விடுகிறான். அப்பொழுது மனதும் களங்கமற்றிருக்கிறது. நமது நாடியிலுள்ள அசுத்தங்களெல்லாம், எப்பொழுது சுத்தமாகின்றனவோ, அப்பொழுதுதான், பிராணன் சுஷும்னத்தில் செல்கின்றது. அப்பொழுதுதான் வைதிகமார்க்கத்தில் நாம் புகுகிறோம். ஜீவன் நில்லாமல் ஓடிக்கொண்டே யிருக்கும்படியான ஒரு சக்கரம். அது மரணத்திற்குமுன் ஒரு நாட்டியம். நாம் சாப்பிட்டு அதை ஜீரணித்து, சத்தை அங்கங்களுக்கு செல்லவிட்டு, உபயோகமில்லாததை வெளிப்படுத்துகிறோம். ஆகாரம் போட்டாலும், போடாமற்போனாலும் அச்சக்கரம் நில்லாது சுழன்று கொண்டேயிருக்கும். அப்படிச் சுற்றிக்கொண்டிருக்கும் போழ்து, பசியெடுக்கும். பசிக்கு ஆகாரமிடாவிட்டால் தேகத்திலுள்ள பாகங்களையே தின்று, க்ஷயம் என்னும்படியான வியாதி நம்மைப் பீடிக்கும். ஆதலால், நாம் வயிற்றுக்கு ஆகாரம் போடாமலிருப்பதற்குமுன் அச்சக்கரத்தை நிறுத்த வேண்டும். பிராணாயாமத்தினாலல்லாது வேறெவ் வழியாலும் நாம் அதைச் செய்ய முடியாது. பசி, நாம் பிராணனை யடக்கியிருக்கிறோமென அறிவதற்கு ஓர் அளவு கருவி. எவனொருவன் பசியை யடக்குகிறானோ அவன் பிராணனை யடக்கிவிட்டதாகச் சொல்லலாம். "ஆகாரமிடாதே" என்பதற்கு "பசியை யடக்கு" என்று பொருளேயல்லாமல், நன்றாகச் சாப்பிடுகின்றவனைப் பட்டினிகிட என்று சொல்லுவதல்ல. பசியைப் போலவே ஏகாதசியன்றையதினம் தூக்கத்தையும் அடக்க வேண்டும். நமதுநாடியில் அசுத்தம் இருக்கும்வரையில் அதைத் தொலைக்க, பிராணனுக்கு, மனஸானது தன்வேலையை நிறுத்தி உதவிபுரிய வேண்டும். பிராணாயாமத்தைத்தவிர வேறெந்தவழியாலும், நாம் நமது தேகத்தை சுத்திசெய்ய முடியாது. ஆகையால் அதுதான் பிரதம அப்பியாசம். பிராணாயாமத்தையும், யோகத்தையும் அப்பியசிக்க ஏகாதசிதினமே தகுதியானது. அத்தினத்தில் நாம் நம்முடைய மனஸையும், தேகத்தையும் கட்டுப்படுத்தி யாளமுடியும். பிறகு மேன்மேல் அப்பியாசத்தால் முக்தியை யடையலாம். மற்ற நாட்களில் சத்துவகுணமுள்ள உணவை உட்கொண்டு, ஏகாதசிதினங்களில் மேற்கூறியபடி பழகியிருந்தால் தேகத்திலுள்ள அசுத்தங்கள் வெளிப்படும் நாளுக்கு நாள் அவ்வசுத்தமும் குறைந்து கொண்டேவரும். பசி, தூக்கம், இவ்விரண்டையும் அடக்கி, எவனொருவன் தெய்வத்தின்மேல் பூர்ணமனதுடன் எண்ணத்தைச் செலுத்துகிறானோ அவன்தான் முக்திமார்க்கத்திலிருக்கிறானென்று சொல்லலாம்.

அரசரும் மதாசாரியரும்

(R. பஞசாபகேசன்)

'அரிதரிது மனிதராதலரிது' என்றபடி நல்வினையால் விவேகத்தில் சிறந்த மானிடஜன்மம் பெற்ற பிறவிகள் உலகத்தில் உயர்வெனப்போற்றும் இயல்பை சற்று நோக்குவாம். உயர்ந்தோர் எனக்கொள்ளப்படுபவர்களிடை யாது குணம் இருக்கக் கண்டு ஜனங்கள் உயர்வை மதிக்கிறார்கள்? அரசரையும் மதகுருவையும் எங்ஙனம் உலகத்தார் பணிவுடனும் பக்தியுடனும் கொண்டாடுகிறார்கள். பெரும் சேனையை திரட்டி வைத்து கொண்டு விளங்கும் அரசரின் அதிகாரத்திற்காகவா ஸாதாரண ஜனங்கள் அவரைப் போற்றுகிறார்கள்; அல்லது அவர் உடுக்கும் உடை, வசிக்கும் மாளிகை இவைகளின் சிறப்பைக்கருதி அவரிடம் பணிவு உண்டாயதா? மதாசாரியர்கள் தரிக்கும் காஷாய வஸ்திரமா பக்தியை யூட்டுவது; அல்லது வெகுகாலமாக தொண்டர்களால் அளிக்கப்பட்ட பொருட்களுக்கு இப்பொழுது அதிபதியாக விளங்குவதாலோ அவரிடம் மேன்மை குடிகொண்டிருக்கிறது?

ஒழுக்கமே மேன்மைக்கும் கீழ்மைக்கும் காரணம். நல்லொழுக்கம் பற்றி தாங்கள் தங்களு

டைய பதவிக்கேற்ற தர்மங்களை தவறாது வழங்கினால் அவர்பால் அன்பும் பக்தியும் மிகுந்தோங்குமன்றோ? அரசர் பதவியில் வீற்றிருப்பவருக்கு நீதிநெறியுடன் பிரஜைகளை பரிபாலிப்பதே கடமை. ஜனங்களுடைய க்ஷேமத்தையே நாடி அதற்குள்ள காரியங்களை செய்யவேண்டுமேயல்லாது, தன்னலத்தையும் தற்சிறப்பையும் பாராட்டக் கூடாது. இவ்வாறாய கடமைகளைப் புறக்கணித்த அரசர்பால் ஜனங்களுக்கு மரியாதையும் வணக்கமும் இராது. பொருள் பெற்று ஊழியம் செய்து வரும் வேலையாளரும் ஸமயம் பார்த்திருந்து நீதிநெறி தவறிய அரசர்களை அவர்கள் பதவியினின்றும் வீழ்த்துவதற்கு இணங்குவார்கள். இங்ஙனமே மதகுருவாய் வணங்கப்பெறும் ஆசாரியரிடத்தில் நல்லொழுக்கங்கள் பல காணப்படும். உலவின்பத்தைத் துறந்து, பிறருக்கு மதக் கொள்கைகளைப் புகட்டும் ஆசாரியனிடத்திலே ஜனங்களுக்கு பக்தியுண்டாகும்.

இங்கிலாந்தில் பொதுஜன வுணர்ச்சியைப் புறக்கணித்து தான் கொண்டுள்ள மாற்றெண்ணங்களை நிறைவேற்றக் கருதி போர் செய்த சார்ல்ஸ் அரசரின் உயிருக்கே கேடு விளைவித்துக் கொண்டார். பிடிவாதமே மேலிட்ட இரண்டாவது ஜேம்ஸ் தன் சேனையினாலேயே வஞ்சிக்கப்பட்டு பதவியை விட்டுவிட்டு தப்பியோடும்படி நேர்ந்தது. மற்றும் பலதேசங்களில் கொடுங் கோன்மையால் அரசர்களை அவர்கள் பதவியினின்றும் நீக்கிவிட்டார்கள். நம்தேச ஸமீபகால சரித்திரத்திலும் அக்பர் சக்கிரவர்த்தியின் நீதிநெறியை வியந்து கொண்டாடியதும் அவுரங்கஜீபின் கொடுங்கோன்மையை வெறுத்து அவர் ராஜ்ய பாரத்திற்கே தீங்கியற்றியதும் நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். அரசர்கள் நீதிநெறி தவறி நடக்கும்போது தேசத்தில் பொது நன்மைக்கென்று பாடுபடும் மனுஷியர்கள் தோன்றி மகுடம் சூட்டப்பெறாத அரசர்களாக விளங்குகிறார்கள்.

இவ்விதமே மதஸ்தாபனங்களிலும் சரித்திரத்தில் பல ஸம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஹிந்து மதாசாரியர்களுடைய கவனக் குறைவால் தொண்டர்கள் மதாசாரங்கள் என்று பெயர் வைத்து பல துராசாரங்களைப் பற்றியுள்ள காலத்தில் புத்தர் தோன்றி புதிய மதம் ஒன்றை ஸ்தாபித்து ஜனங்களை தம் வசமாக்கி யிருக்கிறார். மகமதிய மதமும் பல ஸமயங்களில் மதகுருவின் தூர்போதனையால் பலாத்காரமாய் தங்கள் மதத்தைத் தழுவும்படி போர் செய்ததால் மதத்தின் உயர்வு குன்றி விளங்கிற்று. ஐரோப்பாவில் மதகுருவான போப்களில் பலர் தங்களுடைய தீயவொழுக்கங்களால் அவர்களுடைய அதிகாரத்திற் குட்படாது பலர் விலகினர். இவ்வாறாக மதஸ்தாபனங்கள் சீர் கெடும் போது, நல்லொழுக்கங்களால் சிறந்து விளங்குப் பலர் தோன்றி புதிய மதத்தை ஸ்தாபித்தோ, அல்லது மதத்தை சீர்திருத்த முன்வந்தோ, ஜனங்களின் பக்தியை தங்களிடம் கவர்ந்தனர்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அநந்த பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது பயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தரணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறொருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்புச் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அநந்தபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகு அக்ஷயனுடன் தன் வீட்டிற்கு வந்து சந்தேகங்களை வெளியிட்டு, அநந்த பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச் செய்ததும், பிறகு இராமேசன் கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அக்ஷயன் பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றி வேறு இடம் சென்றதும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

அன்று முழுவதும் அக்ஷயன் குவாலண்டோவில் காத்திருக்க வேண்டியிருந்தது: சாயங்காலம் தான் கல்கத்தாவிற்கு ரயில் வண்டி புறப்பட்டது; மறுநாட்காலையில் கல்கத்தாவில் ரயிலினின்று இறங்கியதும், உடனே டார்ஜிபாரா வில் இராமேசனிருந்த வீட்டிற்குப் போனான். அங்கே ஒருவரும் இல்லை; கதவு தாளிடப்பட்டிருந்தது; அங்கே ஒருவரும் இல்லை என்றும் அண்டை வீட்டார் சொன்னார்கள்.

பிறகு காலுடோலா விற்குப் புறப்பட்டான் அக்ஷயன்; அங்கே அநந்தபாபுவின் அடுத்தவீடான இராமேசன் வீட்டில் ஒருவரும் இல்லை; அநந்தபாபுவின் வீட்டிற்குப்போய், ‘யோகேந்திரா, இராமேசன் ஓடிப்போய் விட்டான். நான் அவனை தொடர முடியாதபடி தப்பித்துக் கொண்டான்’ என்றான்.

“என்னடா இது” என்று அதிசயித்து யோகேந்திரன் விபரமாய் சொல்லும்படி கேட்கவே, அக்ஷயன் ஸவிஸ்தாரமாய் எல்லாவற்றையும் சொன்னான். அக்ஷயனைக் கண்டவுடனேயே இவ்விதம் இராமேசன் ஒளிந்து ஓடினான் என்று கேட்டதும் யோகேந்திரனுக்கு இராமேசனைப் பற்றியிருந்த சந்தேகம் பலப்பட்டது. ‘இது நமக்குப் போதுமான ருசு என்றாலும், ஹேமநளினி மட்டும் அல்ல, அப்பாவும் இராமேசன் வாயினின்றும்

கதை முழுவதையும் கேட்டாலொழிய நம்பமாட்டேன் என்று சாதிக்கிறாரே! என்ன செய்வது? இன்று இராமேசன் வந்து இன்னும் இந்த இரகசியத்தைச் சொல்லும் காலம் வரவில்லை என்று சொன்னால், அதை நம்பி ஹேமநளினியை அவனுக்குக் கலியாணம்செய்து கொடுக்கத் தயாராக இருப்பார் போலும்! இவ்வித மனுஷியர்களைக் கொண்டு என்ன செய்யலாகும்! ஹேமநளினி சற்று வருத்தப் படுவதைக்கூட சகிக்கமாட்டார் அவர்; அவள் அவரிடம்போய் "இராமேச பாபுவுக்கு வேறு மனைவி இருந்தால் என்ன, அவருக்கே என்னையும் கல்லியாணம் செய்து கொடுங்கள்" என்று கேட்டாலுங்கூட அவர் சம்மதிப்பார் என்றே எனக்குத் தோன்றுகிறது. எப்படியாவது இராமேசனைக் கொண்டு முழுக்கதையையும் சொல்லச்செய்தாலொழிய வேறு வழியில்லை; அதை எவ்வளவு சீக்கிரம்செய்து முடிக்கிறோமோ அவ்வளவு நல்லது. இன்னும் அசாத்தியமில்லை இந்தக் காரியம்; நானே முயன்று பார்க்கிறேன். ஆனால் என்னசெய்வது, எப்படித் துவக்குவது என்று தோன்றவில்லையே; ஒருவேளை இராமேசனை அடித்து வசமாக்கவேண்டும் என்று கூடத்தோன்றுகிறது; சரி, இப்போது கை கால் கழுவிக்கொண்டு "டீ" சாப்பிடு; பிறகு சவகாசமாய் பேசுவோம்." அக்ஷயன் அப்படியே கை கால்களைக் கழுவிய பின் "டீ" மேஜை யருகில் உட்கார்ந்தான்; அவன் நினைவு வேறெங்கேயோ இருந்தது; அந்நதபாபு தன் மகளுடன் "டீ" அறைக்குள் வரவே, அவனுடைய எண்ணங்கள் குலைந்தன. ஹேமநளினியும் அக்ஷயனைக் கண்டதும் திரும்பிப்போக யத்தனித்தாள்.

"சீ ஹேமா" என்றான் யோகேந்திரன் கோபத்துடன்; "நீங்கள் தான், அப்பா, அவள் இவ்விதம் மரியாதையை மறக்கும்படி செய்கிறீர்கள், அவளை உட்காரும்படி கட்டாயப்படுத்த வேண்டாமா" என்று ஹேமாவைப் பின் தொடர்ந்து சென்றான் யோகேந்திரன். ஆனால் அதற்குள் ஹேமநளினி மாடத்திற்குப் போய் விட்டாள்.

அக்ஷயன் "யோகா; நீ இப்படி இடையிற் புகுந்து பேசுவது எனக்கு அனுகூலமென்று தோன்றவில்லை; அவளிடம் என்பேச்சையே எடாமலிருப்பது நலம்; காலக்கிரமத்தில் எல்லாம் சரியாய் விடும்; இப்போது கட்டாயப்படுத்தினால் அது வீண் கெடுதலாகவே முடியும்" என்று சொல்லிக்கொண்டே "டீ" யை அருந்திய பின், அக்ஷயன் புறப்பட்டான். இவன் சாந்தத்திற்கு ஒரு எல்லையில்லை போலும்! அறிகுறிகள் தனக்குத் தடையாக இருந்தால் காத்திருப்பதே நலமென்று, சற்றும் மனவருத்தங் கொள்ளாமல், அவதூறாக பிறர் பேசினும் பொறுத்துக் கொண்டு கோபியாமலும் விசனமடையாமலும காத்திருந்தான் அக்ஷயன்; ஏச்சும் அவமானமும் அவனுக்கு பொருட்டாய்த் தோன்றவில்லை; அவனுடைய தோல் எருமைத்தோல் போலும்; அவனுடைய நண்பர்கள் என்ன பரிகசித்தாலும் சற்றேனும் அவன் முகம் கோணாதிருப்பான் அல்லவா?

அவன் புறப்பட்டுப் போனவுடன், அந்நதபாபு "டீ" மேஜைக்கு ஹேமநளினியைக் கூட்டிக்கொண்டு வந்தார். அவளுடைய கபோலங்கள் விவர்ணமாய் வெளுத்திருந்தன; யோகேந்திரனைப் பார்க்கத் தைரியமில்லாதவளாய் தலையைத் தணித்து ஒடுங்கியிருந்தாள்; தன்னோடும் இராமேசனுடனும் கோபங்கொண்டு இருவரையும் கடுமையாகத் தண்டித்த தமையனை முகமெடுத்துப் பார்க்கப் பயந்தவளாய் தலைகுனிந்து இருந்தாள் ஹேமநளினி. ஹேமநளினிக்கு இராமேசன்பாலுள்ள காதலின் பலத்தால் அவனிடமிருந்த முழு நம்பிக்கை குறைவுபடவில்லையெனினும், சந்தேகங்கள் அவள் மனதிலும் உண்டாகாதிருக்கவில்லை; இரண்டு நாட்களுக்கு முன் யோகேந்திரனிடம் இராமேசனை நம்பாமலிருக்கமாட்டேன் என்று பெருமை பேசிவிட்டு, அவ்வறையினின்றும் வெளிப்போந்து தன்னறையில் தனியே சென்றிருந்தபோது அவள் மனதிலும் சந்தேகங்கள் உதிக்கலாயின. வாஸ்தவத்தில், இராமேசன் இவ்விதமாக நடந்து கொள்வதற்கு என்ன காரணம் இருக்கலாம் என்று அவளாய் ஊகிக்க முடியவில்லை. நம்பிக்கையாகிய கோட்டையுள் சந்தேகமென்கிற விரோதியை புகவிடக் கூடாதென்று பலவாறு முயன்றாள். எனினும், அந்த விரோதி கோட்டைக் கதவைத் தட்டி உடைப்பது நிற்கவில்லை; தன்னருங் குழவியை தாயானவள் மார்புற அணைத்துக் காப்பது போல, இராமேசனிடம் தனக்குள்ள தீவிர நம்பிக்கையை அதற்கு விரோதமான ருசுக்களால் தாக்கப்பட்டபோது தன் மார்புற இருத்தி அணைத்துக்கொண்டாள் ஹேமநளினி; ஆனாலும், பாவம், ஒரு அபலை எவ்வாறு இவ்வித கஷ்டத்தைத் தாங்கியிருக்க முடியும்?

அந்நதபாபு இப்போதும் ஹேமநளினிக்கு அடுதத அறையிலே படுப்பவராதலால் அவள் இரவு முழுவதும் எவ்வாறு வருந்தினாள் என்பது அவருக்குத் தெரியும். அடிக்கடி அவர் அவளுடைய அறைக்குச் சென்றபோதெல்லாம் அவள் தூங்காமல் விழித்திருப்பதைக்கண்டு ஏன் என்று அவர் கேட்டால், ஏன் அப்பா நீங்கள் தூங்கவில்லை? என் உடம்புக்கு ஒன்றுமில்லை. இதோ இப்போதும் தூங்கப்போனேன்; நீங்கள் வந்தீர்கள், என்று சொல்லுவாள்.

காலையில் சீக்கிரமே எழுந்து ஹேமநளினிமாடத்தில் சற்று நேரம் உலாவினாள்; இராமேசன் வீட்டை பார்த்திருந்த ஜன்னல்கள் கதவுகள் எல்லாம் இப்போது தாளிட்டு இருந்தன; இளஞ்சூரியன் மெதுவாக ஆகாயத்தில் உல்லாசமாகக் கிளம்பினான்; ஆனால், ஹேமநளினிக்கு இந்தப்புதிய நாளும் ஒளிமழுங்கி நிஷ்பிரயோஜனமாய் சுகமின்றி விளங்கிற்றேயொழிய ஒருநாளாவது சுதினமாகத் தோன்றவில்லையே? அங்கேயே, மாடத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து முகத்தைக்கைகளால் மூடிக்கொண்டு மனம் விட்டு சற்று நேரம் அழுதாள்; அன்றும், தன் காதலன் வராமலே வீண்பொழுதாய் போகுமோ, சாயங்காலம், உல்லாசமாக இருக்கவேண்டிய "டீ" வேளையில் அவன் வரவை எதிர்பார்க்க இடமின்றி இருக்குமே; அவன் வராவிடினும் அடுத்த வீட்டில் தன்னருகிலேதான் இருக்கிறான் என்ற தேறுதலுமில்லாதிருக்குமே என்று அவளுடைய மனம் எவ்விதம் நொந்திருக்குமென்று ஊகிப்பது கடினமோ?

திடீரென அவள் தகப்பனார் ஹேமா, ஹேமாவென்றழைத்தது அவள் காதிற்பட்டது; கண்ணீரைத்துடைத்துக் கொண்டு, அழுகையை மறைத்து, "என்ன அப்பா!" என்று எழுந்திருந்தாள் ஹேமநளினி.

"இன்று எழுந்திருக்க நாழிகையாய்விட்டது" என்றார் அந்நதபாபு வெளியேவந்து அவளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே.

தன் மகளுக்காக விசாரப்படுவதால் அவருக்கு இரவில் நன்றாய்த் தூக்கம் பிடிக்கவில்லை; விடியற்காலத்தில்தான் சற்று கண் மூடினார். ஆகையால் அவர் முகத்தில் சூரிய ஒளி வீசியபின்பே அவ

எழுந்திருந்தார்; உடனே தன் மகளை நாடி அவள் றைக்குப்போய்ப் பார்த்தார். அவளை அங்கே காணாது அவளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டார்; இன்னும் தனியே இருக்க முயலுகிறாளே, ஆறுதல் அடையவில்லையே என்ற வருத்தம் அவருக்கு மேலிட்டது.

"ஹேமு, வா, போவோம், டீ சாப்பிட" என்று அழைத்தார்.

டீ மேஜைபுறத்தில் யோகேந்திரனைச் சந்திக்க வேண்டுமே என்று நடுங்கினாள் ஹேமநளினி; ஆனால் வழக்கம்போல் நடந்து கொள்ளாவிட்டால் தன் தகப்பனார் அதிகம் வருந்துவார் என்று அறிந்தவளாய், அவர்தான் "டீ" வார்த்து சாப்பிடுவது வழக்கமாகையால், அவருக்கு இச்சிறு வேலையையும் செய்யாதிருப்பது தகாது என்று புறப்பட்டாள்.

அவர்கள் "டீ" யறையுள் நுழையுமுன் அங்கே யோகேந்திரனுடன் யாரோ பேசும் குரல் கேட்டது; ஒருவேளை இராமேசனாக விருக்கலாமோ என்ற எண்ணம் உதித்ததும் அவள் இருதயம் படபடத்தது; வேறு யார் அவ்வளவு சீக்கிரம் காலைப்பொழுதில் வருவார்கள்? அங்க மெல்லாம் படபடக்க அறையுள் நுழைந்தாள் ஹேமநளினி; ஆ! அக்ஷயன் அன்றோ அது? தன்கடைசி நம்பிக்கையும் இவ்வாறு சிதறுண்டிடவே, உடனே திரும்பி வெளியே விரைந்தாள் ஹேமநளினி. அவளுடைய தகப்பனார் திரும்பவும் அவளை உள்ளே கூட்டிவந்தபோது தன் கவனமுழுமையும் அவருக்கு "டீ" வார்ப்பதிலேயே செலுத்துபவளாய் அவருடைய நாற்காலிப்புறமாய் ஒடுங்கின இருதயத்துடன் சாய்ந்திருந்தாள்.

இவ்விதம் அவள் நடந்து கொண்டது யோகேந்திரனுக்கு சற்றேனும் பிடிக்கவில்லை; இராமேசன் வராததைப்பற்றி ஹேமா இவ்வளவு வருந்துவது அவனுக்கு யுக்தமாகத் தோன்றவில்லை. அநந்தபாபுவும் அவளோடு துக்கப்படுவதைக்கண்டதும் அவனுடைய க்லேசம் அதிகரித்தது; அவருடைய பிரேமையை தனக்கு ஒரு ஆறுதலாகக் கொண்டு ஹேமநளினி தைரியங்கொள்வது அவனுடைய மனதைக் கசப்பித்தது. "நாம் எல்லோரும் குற்றவாளிகள்! அவளிடம் உண்மையான பிரியம் உடையவராய் அவள்பால் நாம் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்தி அவளுடைய சுகத்திற்காக உழைத்தால் அதற்கு அவள் சற்றும் நன்றி பாராட்டாமல் நம்மை கேடு விளைப்பவராகவன்றோ அவள் கருதுகிறாள்; அப்பாவுக்கோ இப்போது ஒன்றும் தெரியவில்லை; இந்த சமயத்தில் அவளுக்கு ஆறுதல் சொல்வதை விடுத்து கத்தியைப் பிரயோகித்து நோயை வெளியாக்கவேண்டும் அன்றோ!" என்று எண்ணினான் யோகேந்திரன்.

"அப்பா, சமாசாரம் தெரியுமோ" என்றான்.

"தெரியாதே," என்ன என்றார் அநந்தபாபு.

"இராமேசன் தன் மனைவியுடன் தன்னூருக்குப் போக முந்திய நாளிரவு "குவாலண்டோ" வுக்குப்போகும் ரயிலில் ஏறிச் சென்றான்; அக்ஷயனும் அந்த ரயிலில் ஏறுவதைக்கண்டு, அவன் ஊருக்குப் போகாமல் திரும்ப கல்கத்தாவுக்கு வந்து விட்டான்."

ஹேமநளினியின் கை நடுங்கிற்று; "டீ" வார்க்கும்போது டீ மேஜையில் சிந்தியது; நாற்காலியில் அப்படியே சாய்ந்து விட்டாள்.

யோகேந்திரன் ஒரு கண்ணால் அவளைப் பார்த்துக்கொண்டே: "என்ன எண்ணி அவன் ஓடிப்போக யத்தனித்தான் என்று எனக்கு விளங்கவில்லை. அக்ஷயனுக்கு அவன் செய்தி யெல்லாம் தெரிந்தான பிறகு, அதுபோதாதென்று, திருடன்போல் பயந்து ஓடி யொளிப்பானேன்? ஹேமா இதைப்பற்றி என்ன நினைக்கிறாளோ என்னமோ? எனக்கு மட்டும் இப்படி அவன் ஓடியொளிந்தது அவன் குற்றவாளி என்பதை ருசுப்பிக்கப் போதுமானதாகத்தோன்றுகிறது." என்றான்.

சர்வ அங்கங்களும் நடுங்க, ஹேமநளினி, எழுந்து போகிறவளாய் "உன் ருசு யாருக்கு வேண்டும்; நீ வேண்டுமென்றால் விசாரித்துக்கொள். எனக்கு வேண்டியதில்லை" என்று சொல்லவே, யோகேந்திரன் "உன்னை மணக்கப்போகும் பணி தனைப்பற்றி எங்களுக்குக் கேட்க அதிகாரமில்லையா?" என்று கடிந்து கூறினான்; ஹேமநளினி: "கல்யாணத்தைப்பற்றி யார் பேசினார்கள்; அதை நடத்துங்கள், நிறுத்துங்கள், அது உங்கள் இஷ்டம்; ஆனால் இப்படி என் நம்பிக்கையை ஒழிக்க முயலவேண்டாம்" என்று சொல்லுமுன், துக்கம் மேல்பேசவொட்டாது அவள் நெஞ்சில் அடைத்துக் கொண்டது; அநந்தபாபு கண்ணீர் பெருகிய அவளுடைய முகத்தை தன் மார்பில் சார்த்திக்கொண்டு "வா, அம்மா, மாடிக்கு போவோம்" என்று அவளுடன் அவ்வறையினின்று வெளிச் சென்றார்.

தேசானுகூலன்

இஃதொரு சிறந்த தமிழ்பத்திரிகை வாரம் இருமுறை பினாங்கினின்று தேசிய ராஜீயவிஷயம் களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப்படித்தறிந்து கொள்ள வேண்டுமென்றி எழுதவியலாது.

ஆசிரியர்,

வேலை, K. அருணாசல தேவர்.

சந்தாவிபரம்

உள்ளூர் வெளியூர்கட்கு வருஷம் 1 க்கு சிங்கி S10—00 அல்லது ரூபாய் 15—0—0. 6 மீக்கு சிங்கி S 5—50 அல்லது ரூபாய் 8—0—0

மானேஜர் :

தேசானுகூலன்

பினாங்குஸ்திரீட், பினாங்கு

ஸமரஸ போதினி.

இப்பெயர் புனைந்த தமிழ் வாரம் இருமுறைப் பத்திரிகை திங்கள் வியாழன்தோறும் தஞ்சையிலிருந்து வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுயஆட்சி பெறுவதற்கு நியாயமான கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து ஜனஸமூகத்தை நிர்மாணிப்பது இதன் லக்ஷியமாகும். உள்நாடு வருஷசந்தா ரூ 7. ஆறு மாதத்திற்கு ரூ. 4. வெளிநாடு வருஷசந்தா ரூ. 9. ஆறுமாதத்திற்கு ரூ. 5. தேசம், வகுப்பு முன்னேற்றத்தைக் கருதி எவ்விஷயமும் தைரியமாக எழுதப்படும்.

மானேஜர்,

ஸமரஸபோதினீ

தஞ்சாவூர்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம் : "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல திணுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.
Telegrams : "Adimoorthi" Benares.

கதர் ! கதர் !! கதர் !!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை !!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்சள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12 ,,	× 27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	× 44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம் : **'Shree'**

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½ ,,	× 40"	,, 3	,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ 1000 பாலிஸிக்கு ரூ 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.
***Branches* :—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு திணுசுகள், நார்மடி திணுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல திணுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.

பிராஞ்சு :—தபால் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.